**This TAMIL PDF FILE (using Mylai Sri True Type Font) contains 18 Compositions on Lord Ganesha by various composers (Papanasam Sivan, Kotiswara Iyer, Periyasami Thuran, and Thanjavur Shankara Iyer).**

**CONTENTS:**


1. மூலாதார மூர்த்தி கஜமுகனே
2. தத்வமறியத் தரமா
3. கஜ வதன கருணா ஸதன
4. ஸ்ரீ வாதாபி கணபதியே
5. ஸ்ரீ கணேச சரணம் கஜானன
6. கருணை செய்வாய் கஜராஜ முகா
7. ஸ்ரீ கணபதியே திருவருள்
8. ஸதாசிவகுமாரா
9. கை கொடுத்தாளையா
10. அருள் புரி ஐங்கரனே
11. தருணமிதையா தயை புரி
12. கணபதியே கருணாநிதியே
13. விக்ன விநாயக மூர்த்திக்கு மங்களம்
14. வாரணமுகவா துணை வருவாய்
15. மஹாகணபதே மா வல்லபாபதே
16. தந்தி மா முகத்தெந் தை வருக
17. கணநாதனே குணபோதனே
18. மஹாகணபதி வா வா

# மூலாதார மூர்த்தி கஜமுகனே

(பாபநாசம் சிவன் இயற்றியது)

ராகம்: ஹம்ஸத்வனி தாளம்: ஆதி

பல்லவி

மூலாதார மூர்த்தி கஜமுகனே
சரணம் உனது உபய சரணம்

அனுபல்லவி

வேலாயுத குஹன் தனக்கு முன் தோன்றிய
விமலா உமையாள் தரு மகனே
அமலா எமையாள் முனிவர் தொழும்

சரணம்

அன்புடன் தும்பை யருகம் புல்லை எடுத்–
தருச்சனை செய்தாலும் போதும் – அன்பர்
துன்பம் துடைத்துப் பேரின்பம் தரும் வரதா
துணை புரி ப்ரணவாகார கண

# தத்வமறியத் தரமா

(பாபநாசம் சிவன் இயற்றியது)

ராகம்: ரீதிகௌளை தாளம்: ஆதி

பல்லவி

தத்வமறியத் தரமா மூலா –
தார கணபதியே ஸுரபதே உனது

அனுபல்லவி

ஸத்வ குணமும் ஜீவ தயையும ஞானமும்
சற்றுமிலாத கிரானுக்குளது

சரணம்

மதுர பரிபூர்ண மோதக கரனே
மஹா விக்ன வனகுடார வரனே
நிதியொன்பதும் அன்பர்க்கருள் பரனே
நிகில சராசர பீஜாகுரனே
மதிசேகரன் மகனே ஸுமுகனே
மத வாரண முகனே
ச்ருதி முடிவிணர்வரு சித் பரனே–குஹ
ஸோதரனே ராமதாஸனுக்குனது

# கஜ வதன கருணா ஸதன

ராகம்: ஸ்ரீரஞ்ஜனி தாளம்: ஆதி

பல்லவி

கஜ வதன கருணா ஸதனா
சங்கர பாலா லம்போதர ஸுந்தர

அனுபல்லவி

அஜனமரேந்த்ரனும் முனிவரும் பணியும்
பங்கஜ சரணா சரணம் சரணம் ஸ்ரீ

சரணம்

நீயே மூவுலகிற்காதாரம்
நீயே சிவகாம மந்த்ரஸாரம்
நீயே வாழ்விலென் ஜீவாதாரம்
நீயருள்வாய் ஸுமுகா ஓங்கார

# ஸ்ரீ வாதாபி கணபதியே

ராகம்: ஸஹானா       தாளம்: ஆதி

பல்லவி

ஸ்ரீ வாதாபி கணபதியே நின்
திருவடியே சரணம் ஓம்

அனுபல்லவி

தேவாதி தேவன் த்யாகேசன்
திருவிளையாடல் செய் திருவாரூர் வளர்

சரணம்

நம்பினபேர்க் கிஹ பர மிரண்டிலும்
நல் வாழ்வும் பேரின்பமும் நல்கும
தும்பிமுக பெருமானே அடிதொழும்
தொண்டர்கள் வேண்டும் வரந்தருவோனே
சம்புவுடன் கமலாம்பிகை மகிழும்
தனயனே தயாகரனே ஜகம் புகழும்
கும்ப முனிக் கருள் குமரன் முன்தோன்றிய
கோமானே ராமதாசன் உளம் வளர்

# ஸ்ரீ கணேச சரணம் கஜானன

(பாபநாசம் சிவன் இயற்றியது)

ராகம்: திலங்கு       தாளம்: ஆதி 1 களை

பல்லவி

ஸ்ரீ கணேச சரணம் கஜானன
தேவர் முனிவர் பணியும் தயாகர

அனுபல்லவி

நாகாபரணனே நான் மறை போற்றும்
நாமனே ப்ரணவ ரூபனே ஜய

சரணம்

பாதம் நம்பும் ராமதாஸ வரதனே
மோதகப் ப்ரியனே கௌரீ ஸுதனே
ஆதி தேவன் உனதின்னருள் இல்லையேல்
வேதனும் மாலும்செய் தொழில் உண்டோ

# கருணை செய்வாய் கஜராஜ முகா

(பாபநாசம் சிவன் இயற்றியது)

ராகம்: ஹம்ஸத்வனி  தாளம்: தேசாதி

பல்லவி

கருணை செய்வாய் கஜராஜமுகா
கருணாகரனே கணநாயகனே

அனுபல்லவி

தருணம் இதே தமியேன் மனத்தில்
சரணாம்பு ஜத்தைப் பதித்தின் பளித்துக்

சரணம்

விதிமாதவனாதி விண்ணோர் வணங்கும்
மதிவேண் ஈன்ற மாதங்கமே
கதியென்றுனது கழலே அடுத்தேன்
ததியருள் ராம தாஸன் தொழும்பாதா

# ஸ்ரீ கணபதியே திருவருள்

(பாபநாசம் சிவன் இயற்றியது)

ராகம்: தேவமனோஹரி    தாளம்: ஆதி

பல்லவி

ஸ்ரீ கணபதியே திருவருள் தந்தருள் இத்ததியே

அனுபல்லவி

ஆகம மறைமுதலாம் பலகலைகட்
காதி பரம்பொருள் ஆகுமேகனே ஆகுவாஹனே

சரணம்

நின்னருளின்றி யயனும் செயும் வினையும்
நிறைவுறுமோ இடையூறறுமோ யான்
என்நினைவோடு மொழிதன்னிலும் தொழிலிலும்
இன்னல் விரவி இருள் துன்று நெறி சென்று
பொன்றாது முன்னின்று

# ஸதாசிவகுமாரா

(பாபநாசம் சிவன் இயற்றியது)

ராகம்: சுத்தஸாவேரி    தாளம்: ஆதி

பல்லவி

ஸதாசிவகுமாரா கண்பாராய்
ஸகலலோகாதாரா ஸ்ரீ கௌரி

அனுபல்லவி

பதாரவிந்தனே ஸுரமுனிவர் பணியும்
ப்ரணவஸ்வரூப கஜானன நீதுணை

சரணம்

அடியார் நினைத்த வரம் அருள்வாய் கவலையுடன்

இடையூறெல்லாம் சிதறடிப்பாய் உனது
கடைக்கண் பார்வை இருந்தால் கரைகாணாத
கடலும் சிற்றோடையாகாதோ கணபதியே

# கை கொடுத்தாளையா

(பாபநாசம் சிவன் இயற்றியது)

ராகம்: பேகட தாளம்: ஆதி 2 களை

பல்லவி

கை கொடுத்தாளையா கதி யாரைய்யா
நின்கழலினை சரண் ஐயா
கருணையொடித்தருணம் மனங்கனிந்து

அனுபல்லவி

பொய் கிளர் மாய மண் வாழ்வெனும் இருளில்
புகுந்து வருந்த மனம் இணங்காததையுன்
திருவுள்ள மறியாதா

சரணம்

அயன் முதல் வானவரும் உனதருளால்
ஐங் தொழில் புரிகின்றார் – மறை புகழும்
ஆதி தெய்வம் நீயென நம்பினேன் இனி
சோதனை போது மையா
புயலில் சிக்குண்ட வாழை போலும் சுழன்
றுள்ளம் திகைக்குதையா – முப்
பழமும் பொரியவலருந்தும் மெய்யன்பர் ஸஹாயா
புகலிலேன் யானை முகனே பேதை என்னை

# அருள் புரி ஐங்கரனே

(பாபநாசம் சிவன் இயற்றியது)

ராகம்: ஸரஸ்வதி தாளம்: ஆதி 1 களை

பல்லவி

அருள் புரி ஐங்கரனே–மதம் பொழியும்
ஆனைமுகனே கருணா கரனே திரு

அனுபல்லவி

இருள் மயமாம் புவி வாழ்வினிலே–உன
திணையடியலதொரு துணை யறியேன் திரு

சரணம்

ஓங்கார ரூபா கண நாயகா
உமை மகிழ் மகனே விநாயகா
நீங்காதெனது நெஞ்ச ஆலயத்திலே
நீ என்றும் துணைநின்று இன்பந்தந்தே–திரு

# தருணமிதையா தயை புரி

(பாபநாசம் சிவன் இயற்றியது)

ராகம்: சிவரஞ்ஜனி தாளம்: ரூபகம் 1 களை

பல்லவி

தருணமிதையா தயை புரி துதிக்கையா உரிய

அனுபல்லவி

சரணம் என்றுன் மலரடி பணி தமியனை தவிக்க விடாமல்

சரணம்

உன்னருளல தோர் துணை இனி உலகில் இல்லையே
எந்தன் முன்னவனே யானை முகனே முருகனுக்கருளும்
துதிக்கையானே

மத்தியம கால ஸாஹித்யம்

முக்கட் பரன் மகனே விக்ன விநாயகனே
முக்கனி மோதக ப்ரியனே அபய மபயம் விரைந்து வந்தருள்

# கணபதியே கருணாநிதியே

(பாபநாசம் சிவன் இயற்றியது)

ராகம்: கரஹரப்ரியா தாளம்: ஆதி

பல்லவி

கணபதியே கருணாநிதியே
கடைக்கண் பார்த்தருளே ஸ்ரீ மஹா

அனுபல்லவி

துணையடி தொழும் அன்பர் துயர் துடைக்கும் துய்யா
ஸுந்தர சரணார விந்தத் துதிக்கையா

சரணம்

ஸகல ஸுராஸுரர் பணிமலர்ப் பதனே
சங்கரன் உமையும் மனமகிழ் ஸுதனே
ஜகம் முழுதும் நிறையானை முகவனே
தாள் பணிந்தேன் தஞ்சம் நீயேபகவனே

# விக்ன விநாயக மூர்த்திக்கு மங்களம்

(பாபநாசம் சிவன் இயற்றியது)

ராகம்: மத்யமாவதி தாளம்: ஆதி

பல்லவி

விக்ன விநாயக மூர்த்திக்கு மங்களம்

வேழமுகமோடு தவழ்

அனுபல்லவி

அக்னிவைத்த நெற்றிக் கண்ணனும்
ஆதிபராசக்தி அன்னையும்
என் மகன் என் மகன் என்று மடிவைதுக்
கொஞ்சி விளையாடும் அஞ்சு கர பால

சரணம்

ஒரு பகையில்லாத உத்தம தெய்வம்
உம்பர் முனிவர் பணி கணபதி தெய்வம்
விரி சராசராதி மூலமாய் மிளிர் விதி
விஷ்ணு சிவாகாரமாய் ஒளிர்

# வாரணமுகவா துணை வருவாய்

(கோடீச்வரய்யர் இயற்றியது)

ராகம் ஹம்ஸத்வனி -- ரூபக தாளம்

பல்லவி

வாரணமுகவா துணை வருவாய்
அருள்வாய் தயவாய் (வா)

அனுபல்லவி

ஆரணப் பொருளான கந்த கானாமுதத்திற்குன்
கருணாமுதம் உதவியே அருள் மத(வா)

சரணம்

இன்னிசை இயல் இலக்கியம் ஆரியம்

தமிழ் அறிவேது மின்றிக்
கன்னல் அன்ன இக்கந்த கானாமுத நன்னுாலை
உன்னும் கவிகுஞ்சர தாஸன் நான்
உன் அருள் கொண்டே பண்ணத் துணிந்தேன்
முன்னவனே நீ முன்னின்றால் முடியாததொன்றில்லை
ஆதலால் அதிவேகமதாகவே அருள் மத(வா)

## மஹாகணபதே மா வல்லபாபதே

(கோடீச்வரய்யர் இயற்றியது)

ராகம கானடா தாளம் ரீபகம்

பல்லவி
மஹாகணபதே மா வல்லபா பதே
விக்ன நிவாரண வல்லப பதே

அனுபல்லவி

ஸுகானு குணபதே ஸுகுணாகர
கருணா நிதே

சரணம்

மா பக்தி தந்தருள் உமா சக்தி ஈன்றருள்
மாரஸோதர ஸித்தி வினாயக மூர்த்தி
ஆபத்தில் உதவும் நல் அத்தி மாமுக மூர்த்தி
மா பக்த கவிகுஞ்சர தாஸனெனது ஆப்த மூர்த்தி

## தந்தி மா முகத்தெந் தை வருக

(கோடீச்வரய்யர் இயற்றியது)

ராகம் நாட்டை தாளம் ஆதி

பல்லவி

தந்தி மா முகத்தெந் தை வருக

அனுபல்லவி

ஸுந்தர குஹ ஸோதர ஸுமுக

சரணம்

மா வல்லபை மாதை மருவி மகிழ்
காவல கருணாலவால மாவல்ல
கவிகுஞ்சரதாஸன் என்
ஆவலெல்லாம் தீரவே
அருள் தந்திடவே

## கணநாதனே குணபோதனே

ராகம் ஸாரங்க தாளம் ஆதி

(பெரியசாமி தூரன் இயற்றியது)

பல்லவி

கணநாதனே குணபோதனே
கஜ மாமுகனே கதி நீயய்யா

அனுபல்லவி

இணையே இல்லாப் பெருவாழ்வினை
இனிதீயுமோர் தனி நாயகனே

சரணம்

சதுர் வேதங்கள் ஓம் ஓமெனத்
துதி பாடிடும் பரம் ஜோதியே
பத மாமலர் தொழுதேனய்யா
பரிந்தே அருள் செய்வை மெய்யா

# மஹாகணபதி வா வா

(தஞ்சாவூர் சங்கரய்யர் இயற்றியது)

ராகம் நாட்டை தாளம் சங்கீர்ண சாபு

## பல்லவி

மஹாகணபதி வா வா
மனமகிழ்ந்து நீ வா வா

## அனுபல்லவி

மஹாதேவனின் குமாரனே வா
மஹா விக்னஙகள் நீக்கிட வா

## சரணம்

எல்லா இன்பமும் அளித்திட நீ வா
ஏழை எளியேனை காத்திட நீ வா
சொல்லால் இசை மாலை அளித்திட நீ வா
சோதனை செய்யாது விரைவினில் நீ வா